இடங்களுக்கும் சென்று பார்த்தேன் என்றும் சொன்னார். அதற்காக அவருக்குப் பாராட்டு, அரசின் சார்பிலும் பாராட்டு. எங்கெங்கே விடுபட்டிருக்கிறது என்று அவர் இன்றைக்கு என்னிடத்திலே கொடுத்தாலும் சரி, அல்லது நான் தஞ்சைக்குச் செல்கிறபோது கொடுத்தாலும் சரி, நேரடியாக அதிகாரிகளை அழைத்து, அவருக்கு முன்னாலே பேசி, அதற்கு வேண்டிய நடவடிக்கையை நான் எடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. கு. தங்கமுத்து, இருக்கையில் இல்லை. திரு. கு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அவர் முதல் கேள்விக்கு 'சப்ளிமென்டரி' கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வி முடிந்துவிட்டது. அடுத்தக் கேள்விக்குப் போய்விட்டோம். (குறுக்கீடு)

திரு. என். பன்னீர்செல்வம்: நான் திரு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் சரி. வினா எண் 4, திரு. கு. தங்கமுத்துக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம் கேட்கிறார், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

4—

வறட்சியின் காரணமாக நிலவரியை தள்ளுபடி செய்தல்

*39615—திரு. கு. தங்கமுத்து:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த மாவட்டங்களில் 1401 பசலி ஆண்டுக்கு வறட்சியின் காரணமாக நிலவரியை அரசு தள்ளுபடி செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நில வரித் தொகை 1 கோடியே 87 லட்சத்து 24 ஆயிரத்து 37 மற்றும் பைசா 34 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே அடித்த புயல் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய மாவட்டமாகும். அங்கே விவசாயிகளினுடைய தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் அடியோடு அழிந்து, வீடுகளும் நாசமாயிற்று. அங்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் சரியான பலனை அனுபவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாலும், அவர்களால் கொடுக்கப்பட்ட லிஸ்ட்டை அரசு முழுமையாக ஏற்று, அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் ஒரு தொகை வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு, கும்பகோணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டமான திருவிடைமருதூர், வலங்கைமான், பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.4,05, 22, 575.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

5—

காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவப் பணியாளர்கள் நியமித்தல்

*35952—**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத் தலைமையிடம் காஞ்சிபுரத்தில் இருக்கும் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அரசு அறியுமா?